**ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு செயற்திட்டம் (ஐ - வீதி) - 2019**

-----------------------------------------------------------------------------------------------------------

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ - வீதி) செயற்திட்டத்தின் 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பகுதி – 1 இற்கான 2014 நவம்பர் 05 ஆம் திகதிய 3171 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க, பகுதி - 2 இற்கான 2015 மே 28 ஆம் திகதிய 3221 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3222 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் கடன் இலக்க மற்றும் பகுதி – 3 இற்கான 2015 டிசெம்பர் 11 ஆம் திகதிய 3325 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3326 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் இலக்க மற்றும் பகுதி – 4 இற்கான 2017 டிசெம்பர் 15 ஆம் திகதிய 3610 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை அதிகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பதும் நெடுங்கால விளைவுகளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான 906 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 06 பல்வேறு பகுதி நிதியிடல் வசதியின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அதில் 4 வேறான கடன் உடன்படிக்கைகள் 06 பகுதிகளின் கீழ் ரூபா 72,410 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 557 மில்லியனை நிதியீட்ட 2019 திசெம்பர் 31 வரை கையொப்பமிடப்பட்டிருந்நதுடன் மற்றய கடன் உடன்படிக்கைகள் 02 பகுதிகளின் கீழ் ரூபா 31,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 243 மில்லியனை நிதியிட 2018 மற்றும் 2020 இல் கையொப்பமிட்டிருந்தது. மேற்கூறிய 04 பிரிவுகளில் பகுதி 03 இன் கடன் இல 3222 எஸ்ஆர்ஐ (எஸ்எப்) மற்றும் 3326 எஸ்ஆர்ஐ (எஸ்எப்) என்பன முறையே 2017 ஏப்ரல் 07 மற்றும் 2017 மார்ச் 27 இல் மூடப்பட்டிருந்தது. மீதித் தொகை ரூபா 13,780 மில்லியனுக்குச் சமமான 106 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஜூன் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2024 மார்ச் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தய-ாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ----- | -------------------------- | ---------- | ------------------------------------ | ------------------------ |
| (அ) | வடமத்திய, சப்ரகமுவ, வடகிழக்கு, மற்றும் மத்தியமாகாணங்களின் பூர்த்தியாக்கப்பட்ட ஒப்பந்தப்பொதிகளுக்குச் சொந்தமான அளவைப்பட்டியலின் கீழ் பெறுகை செய்யப்பட்ட சில நிலையான சொத்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்நது. இருப்பினும், செயற்திட்டமானது ரூபா 559.64 மில்லியன் பெறுமதியான மேல் மாகாணத்திலுள்ள வடமத்திய, சப்ரகமுவ மற்றும் வடகிழக்கு மாகாணங்கள் மற்றும் களுத்துறை மாவட்டம் என்பவற்றின் வாகனங்கள் தவிர்ந்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்த அச் சொத்துக்களை அடையாளம் காண முறையான ஆவணம் ஒன்றினை பராமரித்திருக்கவில்லை. எனவே நிகழ்ச்சித்திட்டமானது அக் கையளிக்கப்பட்ட சொத்துக்களிற்கு கணக்கீடு செய்திருக்கவில்லை. அதன் பெறுபேறாக, நடைமுறை வேலையானது அப்பெறுமதியால் குறைத்துக்காட்டப்படடிருந்தது. | நடைமுறை வேலையில் மிகை மதிப்பீடு. | ஆர்டிஏவிற்கு கையளிக்கப்பட்டதற்கான சொத்துக்கள் பதிவேடுகள் செயற்திட்டத்தில் கானப்படுகின்றது. பெறுமதியிடல் செயன்முறை ஆர்டிஏவுடனான கலந்துறையாடலூடாக நியமிக்கப்படும் குழுவினால் அமுல்படுத்தப்படும் என்பதுடன் அதனுடன் தொடர்பபட்ட கணக்கீடுகளும் செய்யப்படும். | கையளிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை அடயாளப்படுத்தவும் முறையாக கணக்கிடவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தினால் நிர்மானிக்கப்பட்ட 2,009.75 கி.மீ நீளம் கொண்ட 613 கிராமிய வீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருப்பினும், அதனுடன் தொடர்புபட்ட கிரயம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 01 இன் பிரகாரம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நடைமுறை அல்லாச் சொத்துக்களின் குறை மதிப்பீடு. | ஒவ்வொரு வீதிகளினதும் நிர்மான கிரயம் மேற்கூறிய கையேற்பு செயன்முறை பூர்த்தியடைந்ததன் பின்னர் மாத்திரமே சரியாக கொடுக்கக்கூடும். | சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இற்கு இணங்க வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| ----- | --------------------- | ------------------ | ------------ | -------------------- | ---------------------- |
| (அ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 | வேறான கொடுப்பனவு உருப்படிகள் செயலாற்றல் உத்தரவாதங்களை வழங்குவதன் கிரயங்களை மேற்கோள்காட்ட ஒப்பந்ததாரர்களை அனுமதிப்பதனூடாக வீதி புனர்நிர்மான வேலைகள் மீதான அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களை பெறுவதற்கான ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழான ஏற்பாடகளிற்கு முறனாக காணப்பட்டது. அதன்படி, மொத்தமாக ரூபா 608.6 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களிற்கான கிரயத்தினை மீளப்பெற்றக்கொள்ள ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அத்தொகையினை ஒப்பந்ததாரரிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ள 2019 திசெம்பர் 31 வரை கூட எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரரிற்கு தகாத நன்மைகள். | மேற்கோள் காட்டப்பட்ட ஒப்பந்த விலையின் அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது (கணிசமாக மிகக்குறைவாக மதிப்பிடப்பட்ட ஒப்பந்தவிலை). இப் பெறுமதியை ஒரு நட்டமாக கருத்திலெடுக்கமுடியாது. இருப்பினும், பொது நிபந்தனையின் உப பிரிவு 4.2 கிழக்கு, வடக்க மற்றும் மேல் மாகாணங்களின் பொதிகளில் திருத்தப்பட்டது. அதன்படி, பீஓகியுவ் விலுள்ள கொடுப்பனவு உருப்படிகள் நீக்கப்பட்டுள்ளன. | மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | ஒப்பந்த நிபந்தனையின் உபபிரிவு 14.6 | ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஒப்பந்த பெறுமதியில் 1.5 சதவீதமாக இருந்தது. இருப்பினும் 12 பொதிகளின் கீழாக மதிப்பீடு செய்யப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களின் 36 நிகழ்வுகள் ஆரம்ப தேவைப்பாட்டிற்கு குறைவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இடைக்கால கொடுப்பனவுகளின் மதிப்பிடு மீதான கிரயத்தின் வரம்பு மீறல். | ஒப்பந்ததத்திலுள்ள ஏற்பாடு முக்கியமானது இல்லை என்பதால் செயலாற்றலின் அடிப்படையில் கொடுப்பனவை செலுத்த வேலைதாரால் முடிவொன்று காணப்பட்டது. | கிரயங்கள், நேரம் மற்றும் ஒப்பந்ததாரர்களிற்கான தேவையற்ற நன்மைகள் என்பவற்றை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனையில் ஒப்புதலலிக்கப்பட்ட ஆரம்பகட்ட நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.10 | வேலைகளிற்கான கையேற்பு பத்திரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் 84 நாட்களிற்குள், உபபிரிவு 14.3 இன் பிரகாரம் ஒப்பந்ததாரர் துணை ஆவனங்களுடன் பூர்த்தியாக்கல் அறிக்கை கூற்று பொறியியலாளரிற்கு சமர்ப்பிக்க வேண்டும். 613 வீதிகளின் 2,009.75 கி.மீ.நீளம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருப்பினும் அப்பூர்த்தியாக்கல் அறிக்கை கூற்று கணக்காய்விற்காக காணப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, பூர்த்தியாக்கப்பட்ட வீதிகளின் கிரயத்தினை அறிந்துகொள்ள முடியாமலிருக்கக்கூடும். | பூர்த்தியாக்கப்பட்ட வீதிகளின் கிரயத்தினை அறிந்துகொள்ள முடியாமலிருக்கும். | பூர்த்திசெய்யும் போதான கூற்றுடன் (எஸ்ஏசீ) கையேற்பு பூர்த்தி செய்யப்பட்டிருப்பினும், வீதிவாரியான நிர்மானக் கிரயம் தயாரிக்கப்பட்டிருக்கக்கூடும். | கையேர்ப்பு பத்திரங்கள் பெற்றுக்கொண்ட பின்னர் பூர்த்திசெய்யும் போதான கூற்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | ஆலோசனை உடன்படிக்கையின் உபபிரிவு 20. | அறிவு பரிமாறல் நோக்கங்கள் மற்றும் வீதி வேலை முகவர்களின் இயலளவு விருத்தி என்பவற்றிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களின் மாகாண சபைகள் என்பவற்றின் பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்த திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், வீதி புனரமைப்பு வேலைகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ஒப்பந்ததாரரின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் உரிய முகவர்களிடமிருந்தான உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கு பதிலாக செயற்திட்டத்தினால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். | இது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனைய உரிய முகவர்களின் பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் இயலளவு அதிகரிப்பினை அதிகரிப்பதற்கான வாய்ப்பினை இழக்கும். | செயற்திட்ட அமுல்படுத்தலின் ஆரம்ப காலகட்டத்தில், உரிய மாகாண சபைகள் அறிவு பறிமாற்றல் மற்றும் இயலளவு விருத்தி நோக்கத்திற்காக செயற்திட்டத்திற்கு பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களை விடுவிக்க வேண்டுகோள் விடுத்திருந்தனர். மாகாணசபைகளிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்காததால், களமேற்பார்வை பணியாளர்களின் அவசர தேவையினை நிபர்த்தி செய்ய பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்த ஆலோசகர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். | அறிவு பறிமாற்றலின் மீது உச்சபயனைப்பெற தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல | கூறுகள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| ------------ | ------------ | ---------------------------------- | ------------ | ------------------------------------ | -------------------------- |
| (அ) | தேசிய வீதிகளின் புனர்நிர்மானம். | ஆரம்ப திட்டங்களின் பிரகாரம், தெற்கு, மத்திய, சப்ரகமுவ, வடகிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் மற்றும் மேல் மாகாணத்திலுள்ள களுத்துறை மாவட்டம் ஏனையவற்றிலுள்ள 400 கி.மீ தேசிய வீதிகள் மற்றும் 3,117.62 கி.மீ கிராமிய வீதிகளின் புனர்நிர்மான வேலைகள் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதிக்குள் செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 400 கி.மீ தேசிய வீதிகளின், ஆர்எம்சீ/03 பொதியின் கீழான மரதன்கத்தாவ - ஹொரன வீதியின் 25 கி.மீ மற்றும் ஆர்எம்சீ-எஸ்பி1 பொதியின் கீழான கரப்பிட்டிய – லபுதவ - தவலம வீதியின் 52 கி.மீ என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளின் ஆரம்பிப்பு திகதியிலிருந்து 04 வருடங்கள் கழிந்ததன் பின்னர் மிளாய்வாண்டின் போதே வழங்கப்பட்டிருந்தது. கிராமிய வீதிகளின் புனர்நிர்மானத்துடன் தொடர்புபட்ட தேசிய விதிகளின் 323 கி.மீ இன் மீதி புனரமைப்பு வேலைகள் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி முடிவுக்கு முன்னர் ஆரம்பிக்கப்படக்கூடும் என்பது கேள்விக்குறியாகவே காணப்பட்டது. | நிர்மான வேலைகளின் பூர்த்தியாக்களில் தாமதம் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | முன்னுரிமைகளின் மாற்றங்கள், வீதிப்பட்டியலின் மீடிறன் மாற்றங்கள் மேலும் பல காரணங்களின் காரணமாக ஆரம்ப திட்டங்களின் படி தேசிய வீதிகளினை செயற்படுத்த முடியாமலிருக்கலாம். இருப்பினும், வேலைகள் நிகழ்ச்சித்திட்டம் காலாவதியாவதற்கு முன்னர் ஆகக்குறைந்தது 400 கி.மீ களை பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டுள்ளது | உண்மை திட்டத்துடன் இணங்கவும் கிராமிய வீதிகளுடன் தொடர்புபட்ட தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளை பூர்த்தியாக்கல் என்பவற்றிற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கிராமிய வீதிகளின் புனரமைப்பு. | தெற்கு, சப்ரகமுவ, மத்திய, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் மற்றும் மேல்மாகாணத்திலுள்ள களுத்துறை மாவட்டம் ஆகியவற்றிலுள்ள கிராமிய வீதிகளின் 2,651.06 கி.மீகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. அவற்றில் 2,651.06 கி.மீகள் | நிர்மான வேலைகளின் பூர்த்தியாக்களில் தாமதம் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட படி தேவையான ஒப்பந்த நடவடிக்கைகள் எடுக்காதால் குறித்த 12 ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரரின் மோசமான | புதிய கேள்விதாரர்களின் நிதி மற்றும் வேலை இயலளவு, ஒப்பந்தம் கையளிக்கப்பட முன்னர் முறையாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பூர்த்தியாக்கப்பட்டிருப்பினும், 613 கிராமிய வீதிகளுக்கான 2,009.75 கி.மீகள் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிரந்தது. 42 பொதிகளின் கீழான கிராமிய வீதிகளின் 3,117.62 கி.மீகளில் 12 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புடய கிராமிய வீதிகளின் 986.56 கி.மீ நீளம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | | செயல்திறன் காரணமாக நிறுத்தப்படவேண்டியிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது மேற்கூறிய 5 ஒப்பந்ததாரரிற்கு மீள்விலைகோரலிற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் ஒப்பந்ததாரர்கள் மிகுதி ஒப்பந்தத்திலுள்ள தொடர்ந்து செல்லும் வேலைகளில் எதிர்நோக்க அவர்களது நோக்கங்களை சுட்டிக்காட்டியிருந்தனர். | |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மொத்தமாக ரூபா 146 மில்லியன் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ஒரு விஷேட கடனாக பெறப்பட்டு மீளாய்வாண்டின் போது கடன் நிதியத்திற்கு மேலதிகமாக ரூபா 10 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், பொதுத்திரைசேறியிடமிருந்தான நிதிகளின் பற்றாக்குறை காரணமாக, மேற்கூறிய ரூபா 10 மில்லியன் பொதுதிறைசேரி அல்லது வரிசை அமைச்சின் செயலாளரிடமிருந்து அனுமதியினை பெற்றுக்கொள்ளாமல் பெறப்பட்டிருந்தது. இருப்பினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்தான ரூபா 136 மில்லியன் மேலதிக நிதியீட்டலின் தேவைப்பாட்டிற்கான காரணங்கள் மற்றும் அதற்கான அனுமதி என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நிதியினை தவறாக பயன்படுத்துவதற்கான சாத்தியம். | மொத்தமாக ரூபா 10 மில்லியன் 2019 ஒக்டோபர் மாதத்திற்கான அவசர கொடுப்பனவுகளை எதிர்கொள்ள ஜீஓஎஸ்எல் நிதியின் பற்றாக்குறை காரணமாகவே வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் அதற்கான அனுமதி ஆர்டிஏவின் தலைவரினால் வழங்கப்படடிருந்தது. ரூபா 10 மில்லியன் தொகை அமைச்சிடமிருந்து வேண்டப்பட்ட ஜீஓஎஸ்எல் நிதி கிடைத்ததன் பின்னர் ஆர்டிஏ விற்கு திருப்பிச்செலுத்தப்படும். ஆர்டிஏ வினால் விடுவிக்கப்பட்ட ரூபா 136 மில்லியன் தொகையான ஒரு விஷேட கடன் பெறப்பட்ட என்எஸ்பி கடன் | கடனின் நிதிகளின் உச்சபயனைப்பெறல் மற்றும் மேலதிக நிதிவசதியினை பெற்றுக்கொள்வதை தவிர்த்தல் என்பவற்றிற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வசதியிலிருந்தாகும். செயற்திட்டததுடன் தொடர்புடைய நிறுவனங்களிற்கான பெறப்பட்ட தீர்ப்பனவு விபரங்கள் அதனடிப்படையில் செய்யப்பட்டதன் பின்னர் திர்ப்பனவு செயன்முறை ஆர்டிஏவினால் கையாளப்படுகின்றது. | |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டத்திற்கு எதிராக 12 ஒப்பந்ததாரர்களினால் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் காரணமாக, ஒப்பந்தாரர்களிற்கு செலுத்தப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணத்தில் மொத்தமாக ரூபா 3,734.79 மில்லியன் மற்றும் ஒப்பந்ததாரரினால் வைத்துக்கொள்ளப்பட்ட செயலாற்றல் பத்திரத்தில் மொத்தமாக ரூபா 2,618.47 மில்லியன் போன்றன நிகழ்ச்சித்திட்டத்தினால் மீளப்பெற்றுக்கொள்ள முடியாமல் போகக்கூடும். | பலவீனமான ஒப்பந்த நிர்வாகம் காரணமாக நட்டங்களிற்கான வாய்ப்பு. | இடைநிறுத்தல் கொடுப்பனவுகள் இறுதியாக்கப்பட்டதன் பின்னர் மீளப்பெறப்படும் தொகைகள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். ஒப்பந்தத்திலான ஏற்பாடுகளின் பிரகாரம், செயற்திட்டமானது வேலை ஆரம்பிப்பு முற்பணங்களின் உத்தரவாத பத்திரத்தினை பணமாக மாற்ற அனைத்து 12 ஒப்பந்தங்களினதும் உரிய வங்கிகளிற்கு கேள்வி பத்திரத்தினை வழங்கியிருந்தது. இருப்பினும் நீதிமன்ற உத்தரவின் காரணமாக இச் செயன்முறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. | நிலுவை மீதிகளை மீளஅறவிட செயற்திட்டத்தினால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பின்னர் வடமேல் மாகாணத்தில் நிறுத்தப்பட்ட 2 ஒப்பந்ததாரர்களினால் (கேயூ03 மற்றும் கேயூ05) கைவிடப்பட்ட வேலைகள் காரணமாக குறைந்த ஆபத்தில் வீதிகளினை பயன்படுத்துவதற்கான பூர்த்தியாக்கப்பட்ட அவசர வேைலக்காக மற்றுமொரு ஒப்பந்ததாரரிற்கு (கேயூ01) ரூபா 92 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஏற்படுத்தப்பட்ட மேலதிக செலவுகளை மீட்க நிகழ்ச்சித்திட்டத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பலவீனமான ஒப்பந்த நிர்வாகம் காரணமாக நட்டங்களிற்கான வாய்ப்பு. | ஒரு செயற்படுத்தும் ஒப்பந்ததாரரிற்கு நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் கேயூ3 மற்றும் கேயூ5 இன் அவசர மற்றும் பாதுகாப்பு பறிமாற்றலின் காரணமாக வேலை வழங்குனரால் ஏற்படுத்தப்பட்ட மேலதிக செலவினங்கள் கேயூ3 மற்றும் கேயூ5 பொதிகளிற்கான வேலைதாரரினது கொடுப்பனவுகளில் முழுமையாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஏற்பட்ட மேலதிக செலவினங்களை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | ஏனைய 3 செயலாற்றும் ஒப்பந்ததாரர்களின் அளவைப்பட்டியளிற்காக மாறல் வரிசையினை வழங்குவதனூடாக உரிய ஒப்பந்ததாரர்களினால் கைவிடப்பட்டிருந்த வடமேல் மாகாணத்திலுள்ள கேயூ3, கேயூ4, கேயூ5, பியு2, பியு3 ஒப்பந்த பொதிகளின் புனர்நிர்மானத்திற்கு சேர்க்கப்பட்டிருந்த தொழில் வழங்குனர் மற்றும் பொறியியலாளர்களின் உத்தியோகத்தர்களிற்கான சம்பளங்கள், கொடுப்பனவுகள், வீடு மற்றும் அலுவலக வசதிகள் மற்றும் வாகன பராமரிப்பிற்காக செலுத்தவதற்காக மொத்தமாக ரூபா 23 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டின் போது நிர்மான வேலைகளில் ஈடுபடாமல் செலவுகள் ஏற்பட்டது. இது நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒரு மேலதிக கிரயமாக இருக்கும். | பலவீனமான ஒப்பந்த நிர்வாகம் காரணமாக நட்டங்களிற்கான வாய்ப்பு. | பொறியியலாளர்கள் மற்றும் தொழில் வழங்குனர்களின் அதிகளவான செயற்திட்ட முக்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது வசதிகள் என்பன என்.டபள்யு.பி (NWP) இலுள்ள ஒரு தனி செயற்திட்டமாக அவைகளை கருத்தில்கொண்டு 8 ஒப்பந்தப் பொதிகளினூடாக வழங்கப்பட்டிருந்தது. எனவே உத்தியோகத்தர்கள் பொதுவாக அனைத்து செயற்திட்டங்களையும் நிர்வகித்து முகாமை செய்கின்றனர். மறுபுறம், ஒப்பந்த பொதிகள் நிறுவப்பட்டிருந்த பின்னரும் கூட சில உத்தியோகத்தர்கள் மற்றும் வசதிகள் பின்நிறுத்தல் நடவடிக்கைகளிற்காக முக்கியமான தேவையாக காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்களின் மேலதிக நேர வேலைக்கமர்த்தலின் காரணமாக தொழில் வழங்குனர்களிற்கான அனைத்து தொடர்புடைய அனைத்து மேலதிக கிரயங்களும் கூட தொழில்வழங்குனரின் வேண்டு கோளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | தாமதமில்லாமல் வேலைகளை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | -------------------------- | ------------ | -------------------------------------------- | -------------------------- |
| (அ) | நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கூறின் படி, கிராமிய மார்க்க வீதிகள் காலநிலை நியமங்களினை முகங்கொடுக்கக்கூடிய வகையில் புனரமைக்கப்பட வேண்டியதுடன் மூன்று வருட காலத்திற்கு பராமரிக்கப்படலும் வேண்டும். இருப்பினும், 2019 நவம்பர் 27 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக | செயற்திட்டத்தின் குறிக்கோள் அடையப்பெறாமல் இருக்கலாம். | நிர்மானத்திலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் கடுமையான வரண்ட காலத்தில் நிழக்கீழ் மேற்பரப்பு மீது சில வெடிப்புகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2019 திசெம்பர் காலப்பகுதியில் காணப்பட்ட மிக அதிகமான எதிர்பாராத மழை காரணமாக, | நிர்மான விடயங்களை திருத்தவும் வீதிகளின் தரத்தினை உறுதிப்படுத்தவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளிக்கள விஜயத்தின் மீது, வீதிகளின் நிழக்கீழ் மேற்பரப்பு மீது சில வெடிப்புக்களும், கேயு4 பொதியின் கீழான குருநாகல் மாவட்டத்திலுள்ள மீஓயா பாலம் மற்றும் நீலம்பதுவேவ தொடக்கம் உடுவிவுல்வெவ வீதியினூடாக கசிகோட்டை சந்தி தொடக்கம் பில்ல வரையான சில இடங்களில் வீதி மூழ்கியும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. பின்னர், அவ்வீதிகள் அன்மைய வெள்ளத்தினால் முழுமையாக அழிவடைந்து காணப்பட்டமை 2020 மே 13 இல் அவதானிக்கப்பட்டிருந்தது. எனவே, உருப்படியினது நோக்கமானது நிகழ்ச்சித்திட்டத்தினால் நிறைவேற்றப்படாமல் இருந்தமையை அது வெளிக்காட்டுகின்றது. | | ஆர்டி ஐடி 16 மற்றும் ஆர்டி ஐடி 96 வீதிகளின் சில பகுதிகள் நீரில் மூழ்கியிருந்தது. மேற்கூறிய வீதிகள் மீது சில வெடிப்புகள் மற்றும் கழுவப்பட்ட பகுதிகளை நாங்கள் அவதானித்திருந்ததுடன் அதனை பொறியியலாளருக்கு அறிக்கையிட்டும் இருந்தோம்.<br>மேற்கூறிய பழுதுகளடைந்த நேரத்தில், ஒப்பந்தமானது நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வித நேரடி ஒப்பந்தங்களும் இல்லாதிருந்ததிலிருந்து, ஒப்பந்ததாரரிடமிருந்து அவரது சொந்த செலவினூடாகவோ காப்புறுதி பெட்டகையினூடாகவோ பாதிப்புக்களை சரிசெய்ய எங்களுக்கு எவ்வித சந்தர்ப்பமும் காணப்படவில்லை. இருப்பினும், வடிவமைப்புக்களிற்கான அனைத்து பொறுப்புக்களும் ஒப்பந்ததாரரிற்கு இருந்ததிலிருந்தும் மற்றும் நிறுத்தப்பட்ட ஒப்பந்ததாரர் ஊடாக பெற்றுக்கொள்வது சாத்தியமற்றதன் காரணமாக, பழுதடைந்த வீதி பகுதிகளுடன் தொடர்புபட்டு முன்னரே செய்யப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் முடிவுறுத்தல் மதிப்பீட்டில் (வீஏடி) ஒப்பந்ததாரரிடமிருந்து கழிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, வேலை வழங்குனரிற்கான சாத்தியமான அனைத்து செலவினங்களும் கூட தொழில்தருனரின் வேண்டுகோளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 7.5 கி.மீ நீளம் கொண்ட இலுப்பிட்டி ஊடாக மாவியெல சந்தி தொடக்கம் தெலிபேவ விகாரை வீதி வரையான வீதி புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருப்பினும், அளவைப்பட்டியலிலுள்ள பால புனர்நிர்மானத்திற்கான ஏற்பாடுகள் குருநாகல் மாவட்டத்தின் ஒப்பந்தப்பொதி-01 இன் கீழான | செயற்திட்டத்தின் குறிக்கோள் அடையப்பெறாமல் இருக்கலாம். | பாலநிர்மான உருப்படிகள் கேயூ1 பீஓகியுவ்விற்குள் உள்ளடக்கப்படவில்லை. எனினும், சீஎச்:4+814 இல் ஆர்டி ஐடி 33 மீதான 3 தூண்களுடனான மிகவும் பாழடைந்த மிகவும் சிறிய பாலங்கள் மீது அந்த நேரத்தில் காணப்பட்ட சேமிப்பினைக் | நிர்மான விடயங்களை திருத்தவும் வீதிகளின் தரத்தினை உறுதிப்படுத்தவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| பீஓகியுவ் தயாரிக்கும் நேரத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பாலத்தினை மீள் நிர்மானிப்பது தோல்வியடைந்ததன் பெறுபேறாக, அனைத்து புனரமைக்கப்பட்ட வீதி வேலைகளின் தரமானது மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. | கொண்டு செயற்திட்டத்தின் பிந்திய கட்டத்தில் பொருத்தமான சரிசெய்யப்பட்ட விகிதங்களைக் கொண்டு வசதிக்காகவும் வீதி பயன்பாட்டாளர்களின் பாதுகாப்பிற்காகவும் செயற்பட்டிருந்தது. |

### 3.4 புறநடையான கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம்<br>----------------------------- | விளைவு<br>------------- | முகாமைத்துவத்தின் கருத்துரைகள்<br>--------------------- | கணக்காய்வாளரின் பரிந்துரைகள்<br>------------------------- |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 1,180.44 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள் மெதுவான செயலாற்றல் மற்றும் சில ஒப்பந்ததாரர்களின் முடிவுறுத்தல் என்பன காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனை மீளப்பெற்று பயன்படுத்தாமையின் மீது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்பாடானது குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் போகக்கூடும். | பயன்படுத்தப்பட்ட மீதிகள் மீதான ஒப்படைப்பு கட்டணங்கள் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடனின் நடைமுறைப்படுத்தல் திகதியின் பின்னரே பொருந்தும். | தேவையற்ற கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 1981 இன் 03 ஆம் இலக்க பொதுமக்கள் ஒப்பந்தச்சட்டத்தின் பிரகாரம், உள்நாட்டு பங்காளர்களுடன் இணைந்து ஒப்பந்தத்தினை மேற்கொள்ளும் வெளிநாட்டு ஒப்பந்ததாரர் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்தல் வேண்டும். எனினும், உள்நாட்டு ஒப்பந்ததாரர்களுடன் இணைந்து வடமேல் மாகாணம் மற்றும் களுத்துறை மாவட்டத்தின் வீதி புனர்நிர்மான வேலைகளில் ஈடுபட்டுள்ள சீனா மற்றும் இந்தியாவிலிருந்தான ஒப்பந்ததாரர்களின் 02 நிறுவனங்களின் பதிவினை உறுதி செய்ய வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், குருநாகல் மாவட்டத்திலுள்ள கேயூ3 மற்றும் கேயூ5 பொதிகளின் கீழான உரிய ஒப்பந்தங்கள் மந்தகர செயலாற்றலை ஏற்படுத்தக்கூடிய ஒப்பந்ததாரர்களின் இயலளவினை ஆரம்பகட்டத்தில் நிகழ்ச்சித்திட்டத்தினால் முறையான மதிப்பீடு செய்யப்பட்டிராததன் காரணமாக, பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. | சட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மீது பிரச்சினைகள் எழக்கூடும். | ஏடிபீ இன் வழிகாட்டியின் பிரகாரம், ஒப்பந்ததாரர்கள் ஏடிபி இன் உறுப்பு நாட்டில் ஒரு நிர்மான கம்பனியாக பதியப்பட்டவர்களே தெரிவுசெய்யப்பட்டனர். | பொறுப்புடைய தரப்பினர்களை அடையாளம் கானவும் சுற்றறிக்கை வழிமுறைகளைப் பின்பற்றுவதில் அலட்சியம் குறித்து நடவடிக்கை எடுக்கவும் செயற்திட்ட கண்கானிப்பு பிரிவால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.6 முன்னய கணக்காய்வு அறிக்கைகளிள் குறிப்பிடப்பட்ட விடயங்களில் தீர்க்கப்படாமல் இருந்தது.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | ரூபா 304.23 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் கேகாலை மாவட்டத்தில் வீதி புனர்நிர்மானத்தில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரரிற்கு முற்பண | ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மை ஏற்படக்கூடியதுடன் | இது ஒரு மந்த செயலாற்றலால் நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களில் ஒன்றானதுடன் இடைநிறுத்தல் | இம் மேலதிகமாக செலுத்திய தொகையினை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தரவு பெறுமதி ரூபா 30.26 மில்லியனிற்கு மேலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இம் மேலதிக தொகை கொடுப்பனவினை மீளப்பெற்றுக்கொள்ள 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட நிகழ்ச்சித்திட்டதினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களை திரும்பப்பெற்றுக்கொள்வது சாத்தியமற்றதாகலாம். | கொடுப்பனவுகளுடன் இப்பெறுமதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | கிராமிய வீதிகளின் புனர்நிர்மானத்தில் ஈடுபட்டிருந்த உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள், வர்த்தக மற்றும் முதலீட்டுகொள்கைகள் திணைக்களத்தின் 2016 செப்டம்பர் 05 ஆம் திகதிய டிஐபீ/டிபீ/08/53/2016-09 ஆம் இலக்க சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்ட சலுகையில் ரூபா 324 மில்லியன் பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மீள ஏற்றுமதி செய்வதற்கான உடன்படிக்கையுடன் வரிவிலக்குச்சலுகையின் கீழ் இறக்குமதி செய்ததனை தேவைக்கதிகமாக மீளப்பெற்றிருந்தனர். இருப்பினும், நிகழ்ச்சித்திட்டமானது ஒப்பந்தப்பொதிகளில் வரையறுக்கப்பட்டிருந்த நோக்க நடவடிக்கைகளிற்காக அவ் இயந்திரங்களின் பயன்பாட்டை கண்கானிப்பதற்கு முறையான ஒரு பொறிமுறையினை பின்பற்றியிருக்கவில்லை. மேலும், அப்பொதிகளுக்கான ஒப்பந்ததாரர்கள் நிதி இயலளவில் பற்றாக்குறை காரணமாக அவர்களது ஒப்பந்தத்தில் செயலாற்ற இயலாது இருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டமானது அவ் உருப்படிகள் மீள் எற்றுமதி செய்யப்பட்டதா இல்லையா என்பதை சரிபார்க்க எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை வழிகாட்டல்களை மீறுவதனூடாக நிதிகளின் தவறான பயன்பாடு. | இவ் வரிச்சலுகையானது செயற்திட்டத்தினை ஒரு தேசிய அபிவிருத்தி செயற்திட்டமாக கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு செயற்திட்டத்தின் ஒப்பந்ததாரரிற்கு நிதி கொள்கைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது. | இவ்விடயத்தினை விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |